**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.341/2020**

**பி.வா.சா.–4 –கர்ணன் , த/பெ. வேலுச்சாமி**

**நாள். 04.03.2026**

**பி.வா.சா.4 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் முருநெல்லிக்கோட்டை ஊராட்சியில் 2015 முதல் நடப்பாண்டு வரை பணியாற்றி வருகிறேன். பஞ்சாயத்து செயலாளராக பணியாற்றி வருகிறேன். தாவா வழக்கின் பிரதிவாதிகள் யார், எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் , அவரது அப்பா பெயர் என என்பது எனக்கு தெரியும். ஆண்டிவேல், பட்டுமணி, சுப்புத்தாய், நாகம்மாள், துரையன் ஆகியோர்கள் தாவா வழக்கில் பிரதிவாதிகள் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11,12,15,17,18 இரசீதுகள் தாவா சொத்துகளுக்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த சர்வே எண் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. மேற்கூறிய 5 நபர்கள் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வேறு இடத்தில் குடியிருக்க கூடிய 5 நபர்களின் ஆவணங்களைத் தான் பி.வா.சா.ஆ.11,12,15,17,18 இரசீதுகளாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளான பழனிச்சாமி, செல்வகுமார், முத்தம்மாள், பெருமாள், நந்தகோபால் ஆகியோர்கள் சம்மந்தப்பட்ட இரசீதுகள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பழனிச்சாமி,சுப்பிரமணி, செல்லம்மாள், ஜெயராஜ், பாண்டி ஆகிய 5 பேர்களுக்குத்தான் இரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பழைய இரசீதுகளில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 2015 ல் தான் பணிக்கு சேர்ந்தேன். 2024 முதல் 2026 வரை ஒட்டு மொத்தமாக இரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன், அரையாண்டுக்கானதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தீர்மானத்தின் அடிப்படையில் அசெஸ்மெண்ட் செய்யாமல் எதன் அடிப்படையில் வீட்டு வரி இரசீது கொடுத்தேன் என்றால் ஏற்கனவே அவர்கள் பெயர்கள் இருந்ததால் 2015 க்கு பிறகு அதே பெயரில் இரசீது கொடுத்து வந்தேன். நான் இரசீது கொடுக்கும் போது மேற்படி நபர்களுக்கான பட்டாவோ, கிரையபத்திரத்தை சரிபார்த்து கொடுத்தேனா என்றால் பார்த்தேன். நான் இரசீது கொடுத்த நபர்கள் பெயரில் பட்டாவோ, கிரையப்பத்திரமோ இல்லை என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை என்பதை தெரிந்து கொண்டேன். ஒவ்வொரு இரசீதுக்கும் வீட்டு கதவிலக்க எண்கள் மாறும். கதவு எண்கள் மாறுபடாது என்றாலும் ஆரம்பத்தில் கொடுத்த கதவு எண்கள்தான் பின்னிட்டு

வழங்கப்படும் இரசீதுகளில் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் கொடுத்த இரசீதுகளில் வரிவிதிப்பு எண் மட்டுமே கொடுத்து விட்டு ஒவ்வொரு இரசீதிலும் ஒவ்வொரு கதவு எண் கொடுத்துள்ளதால் அது தவறு என்றால் சரியல்ல. நான் இரசீது வழங்கிய நபர்களுக்கு அதே கிராமத்தில் வேறு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆகவே நான் தாக்கல் செய்த இரசீதுகள் அவர்களின் வேறு வீடுகளுக்கு உரிய இரசீதுகள் என்றால் அவ்வாறு இல்லை. அதன் கதவு எண்கள் வேறு. நான் தாக்கல் செய்துள்ள இரசீதுகளில் உள்ள நபர்கள் எந்த வித ஆவணமும் இல்லாமல் தகர சீட் போட்டு வசித்து வருகிறார்கள் என்றால் அவ்வாறு இல்லை. ஓட்டு வீடாகத்தான் உள்ளது. நான் வழங்கிய இரசீதுகளில் பட்டா எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த ஆவணங்களும் இல்லாமல் 1 முதல் 11 பிரதிவாதிகள் தற்காலிகமாக உள்ள இடத்திற்கு என்னால் இரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஓட்டு வீடுகள் இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் செய்துள்ள இரசீதுகளுக்கும் பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்துக்களுக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இரசீதுகளுக்கு உடைமையானவர்கள் என்னை கேட்டுக் கொண்டதற்காக நான் பொய்யாக இரசீது தயார் செய்து வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை – இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.04 20:50:58 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.